1973 நவம்பர் 19]

Financial assistance from Rural Electrification Corporation.

* 193 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Rural Electrification Corporation has financed the State Electricity Board; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) 1970-71-ல் வழங்கிய கடன் தொகை ரூ. 211.940 லட்சம். 1971-72-ல் வழங்கிய கடன் தொகை ரூ. 184.538 லட்சம். 1972-73-ல் வழங்கிய கடன் தொகை ரூ. 136.566 லட்சம். ஆக மொத்தம் ரூ. 533.044 லட்சம்.

THIRU N. DENNIS: May I know, Sir, whether that amount is used for agricultural production or for lighting?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, ஒவ்வொரு திட்டத்திற்கும் ரூரல் எலக்டிரிசிடி கார்ப்பரேஷனிடமிருந்து கடன் பெறுகிறபோது, அவர்கள் இந்தக் கடன் வேளாண்மைக்கு, இந்தக் கடன் தெருவிளக்குகள் போடுவதற்கு என்று குறிப்பிட்டு அறுதியிட்டுக் கொடுக்கிறார்கள். அப்படி வாங்கப்படுகிற தொகை அந்தந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

Thermal Power Stations.

* 194 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon the Minister for Electricity be pleased to state the reasons for the delay in setting up Thermal Stations in Tuticorin and Mettur?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, 400 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட தூத்துக்குடி அனல் மின்சார நிலையம் அமைக்க 12—11—1973-ம் தேதியன்று திட்டக்குழு அனுமதி வழங்கியுள்ளது. மேட்டூர் அனல் மின்சார நிலையத் திட்டம் திட்டக் குழுவின் ஆய்வில் உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, ஒவ்வொரு திட்டத்தையும் சர்க்கார் எடுத்துக் கொள்வதற்கு முன்பாக ஒரு 30 பர்சன்டேஜ் வேலை முடித்து இருப்பார்கள். கிட்டதட்ட ஒரு அனல் மின்சார நிலையம் அமைக்க 4, 5 வருஷம் ஆகும். சர்க்கார் அதை விரைவில் முடிக்க, 'டாப் பிரையாரிடி' கொடுத்து 1 வருட காலத்தில் முடிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?